## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.119/2012

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 04 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மல்லீஸ்வரி | மதம் | : இந்து |
| க/பெ | : சலபதி | ஜாதி | : -- |
| வயது | : 37 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : துப்புரவு தொழிலாளர் | வட்டம் | : திருத்தணி |

**04.03.2026**

**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 பட்டா போகா மகன் சரிதிகா பெயரில் உள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 1 பட்டா எண்.164 என்றால் சரிதான். கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட பி.வா.சா.ஆ 3ல் நிலத்தின் பட்டா கதிர்காடு பெயரில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கதிர்காடு பெயரில் உள்ள பட்டா எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நாங்கள் பட்டா கேட்டோம். VAO மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தரவில்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் கதிர்காடு பெயரில் எந்த பட்டாவும் இல்லை என்றாலும் உண்மையில் அவ்வாறு பட்டா இருந்திருந்தால் எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல.

2. கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட பி.வா.சா.ஆ 3ன்படி வீடு கட்டி யார் குடியுள்ளார் என்றால் நாங்கள் வீடு கட்டவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 செட்டில்மெண்ட் பதிவேடு புல எண்.124/14க்குரியது என்றால் ஆமாம். புல எண்.124/14தான் வழக்கு சொத்து என்றால் ஆமாம். புல எண்.124/14 செட்டில்மெண்ட்

பதிவேட்டில் சந்தையா பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. SLRஐ யார் எங்கிருந்து வாங்கினார் என்றால் என் தம்பி தாலுகா அலுவலகத்தில் இருந்து வாங்கி வந்தார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 4 வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றாலும் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 பட்டாவில் உள்ள சரிதிகா என்பவரது இறப்பு, வாரிசு சான்றுகள் தாக்கல் செய்யவில்லை என்றால் அது தீ விபத்தில் எரிந்துவிட்டது. அவ்வாறு உண்மையில் இறப்பு, வாரிசு சான்றுகள் தீ விபத்தில் எரிந்திருந்தால் நான் எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. குடிசை வீடு எந்த வருடம் அவ்வாறு எரிந்துபோனது என்றால் 2013 இருக்கலாம். எனக்கு வருடம் சரியாக தெரியவில்லை. நான் அப்போது என் கணவர் வீட்டில் இருந்தேன். குடிசை வீடு எந்த தேதியில் எரிந்துபோனது என்பதற்கோ அந்த வீடு யாருடைய பெயரில் இருந்தது என்பதற்கோ நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் கிராம நிர்வாக அதிகாரியிடம் கேட்டேன். அவர்கள் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதால் தர முடியாது என்று சொல்லிவிட்டார். வீடு எரிந்து போனதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் உண்மையிலேயே அவ்வாறு ஏதேனும் நடந்திருந்தால் அதை நான் எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3ல் கதிர்காடு என்கிற சரிதிகா என்பவர் மீது பட்டா, சிட்டா, அடங்கல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. கதிர்காடு என்பவரும் சரிதிகா என்பவரும் ஒரே நபரா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 7 இறப்பு சான்றிதழில் கதிர்காடு என்ற பெயர்தான் உள்ளது என்றாலும் சரிதிகா என்ற பெயர் இல்லை என்றாலும் த/பெ போலுகாடு என்றுதான் உள்ளது என்றால் சரிதான். கதிர்காடு என்ற சரிதிகா பெயரில் வருவாய் ஆவணங்கள் இருப்பதாக நான் பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வெவ்வேறு நபர்கள் பெயரில் உள்ளது என்றாலும் அதற்கும் வழக்கு சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 11 புகார் மனு யார் கொடுத்துள்ளார் என்றால் என் அப்பா கொடுத்தார். பி.வா.சா.ஆ 11 புகாருக்கான CSR ரசீது நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ 11 புகாரிலேயே வீடு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அந்த வீட்டை எரிக்க முயற்சித்ததால்தான் புகார் கொடுத்தோம். பி.வா.சா.ஆ 11 புகாரிலேயே உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ 11 புகார் கொடுத்த தேதியில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் இந்த வழக்கு 03.08.2012ல்தான் தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் விசாலம்மாள் என்பவர் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து திரும்ப பெற்றுவிட்டார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 16 வில்லங்க சான்றிதழ் புல எண்.124/19க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் புதிய புல எண்.124/14 ஆகும். பழைய புல எண்.124/9 ஆகும். மேற்படி புல எண் குறித்த விவரங்களை எனது எதிர்வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ 16 வில்லங்க சான்றிதழ் புல எண்.124/14, 124/9க்கு தாக்கல் செய்யப்படாமல் வழக்கிற்கே சம்மந்தமில்லாத 124/19க்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)